

# SIVAPURANAM MISSION

www.Sivapuranam.in

திருச்சிற்றம்பலம்

# 5. திருச்சதகம்

(திருப்பெருந்துறையில் அருளியது)

(6) அநுபோகசுத்தி

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)



# திருச்சிற்றம்பலம்



ஈசனே என் எம்மானே எந்தை
பெருமான் என்பிறவி
நாசனே நான் யாதும்ஒன்று அல்லாப்
பொல்லா நாயான
நீசனேனை ஆண்டாய்க்கு நினைக்க
மாட்டேன் கண்டாயே
தேசனே அம்பலவனே செய்வது
ஒன்றும் அறியேனே. 51





செய்வது அறியாச் சிறுநாயேன்
செம்பொன் பாதமலர் காணாப்
பொய்யர் பெறும்பேறு அத்தனையும்
பெறுதற்கு உரியேன் பொய்இலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாதம்
மேவக் கண்டுங் கேட்டிருந்தும்
பொய்யனேன் நான் உண்டு உடுத்துஇங்கு
இருப்பது ஆனேன் போரேறே





போரேறே நின் பொன்னகர்வாய்
நீபோந்து அருளி இருள்நீக்கி
வாரேறு இளமென் முலையாளோடு உடன்
வந்தருள அருள்பெற்ற
சீரேறு அடியார் நின்பாதஞ் சேரக்
கண்டுங் கண்கெட்ட
ஊர்ஏறாய் இங்கு உழல்வேனோ
கொடியேன் உயிர்தான் உலவாதே





உலவாக் காலம் தவம்எய்தி உறுப்பும்
வெறுத்து இங்கு உனைக்காண்பான்
பலமா முனிவர் நனிவாடப்
பாவி யேனைப் பணிகொண்டாய்
மலமாக் குரம்பை இதுமாய்க்க மாட்டேன்
மணியே உனைக்காண்பான்
அலவா நிற்கும் அன்புஇலேன்
என்கொண்டு எழுகேன் எம்மானே

54





மான்நேர் நோக்கி உமையாள் பங்கா
வந்து இங்கு ஆட்கொண்ட
தேனே அமுதே கரும்பின் தெளிவே
சிவனே தென்தில்லைக்
கோனே உன்தன் திருக்குறிப்புக்
கூடுவார்நின் கழல்கூட
ஊன்ஆர் புழுக்கூடு இதுகாத்துஇங்கு
இருப்பதானேன் உடையானே





உடையானே நின்தனை உள்கி உள்ளம்
உருகும் பெருங்காதல்
உடையார் உடையாய் நின்பாதஞ் சேரக்
கண்டு இங்கு ஊர்நாயிற்
கடையானேன் நெஞ்சு உருகாதேன்
கல்லா மனத்தேன் கசியாதேன்
முடையார் புழுக்கூடு இதுகாத்துஇங்கு
இருப்பதாக முடித்தாயே





முடித்த ஆறும் என்றனக்கே
தக்கதே முன் அடியாரைப்
பிடித்த ஆறுஞ் சோராமற்
சோரனேன் இங்கு ஒருத்தி வாய்
துடித்த ஆறும் துகில்இறையே பண
சோர்ந்த ஆறும் முகங்குறுவேர்ய
பொடித்த ஆறும் இவைஉணர்ந்து
கேடு என்றனக்கே சூழ்ந்தேனே





தேனைப் பாலைக் கன்னலின் கேக்
தெளிவை ஒளியைத் தெளிந்தார்தம்
ஊனை உருக்கும் உடையானை
உம்ப ரானை வம்பனேன்
நான்நின் அடியேன் நீஎன்னை
ஆண்டாய் என்றால் அடியேற்குத்
தானுஞ் சிரித்தே அருளலாந்
தன்மையாம்என் தன்மையே

58





தன்மை பிறரால் அறியாத
தலைவா பொல்லா நாயான
புன்மை யேனை ஆண்டுஐயா
புறமே போக விடுவாயோ
என்னை நோக்குவார் யாரே
என்நான் செய்கேன் எம்பெருமான்
பொன்னே திகழுந் திருமேனி
எந்தாய் எங்குப் புகுவேனே





புகுவேன் எனதே நின்பாதம்
போற்றும் அடியாருள் நின்று
நகுவேன் பண்டு தோள்நோக்கி
நாணம் இல்லா நாயினேன்
நெகும்அன்பு இல்லை நினைக்காண
நீஆண்டருள அடியேனுந்
தகுவனே என் தன்மையே
எந்தாய் அந்தோ தரியேனே



ஸ்ரீ மாணிக்கவாசகர்